IRCDS

# மாற்றுத்திறனாளிகள் சுய உதவிக்குழு - சங்க கூட்டமைப்பு கையேடு




**ஐ.ஆர்.சி.டி.எஸ். - IRCDS**

எண். 13, Dr. அப்துல் கலாம் தெரு, எம்.டி.எம். நகர்,
திருவள்ளூர் மாவட்டம் – 602 001. போன் : 044 27660084

**வசந்தம் மாற்றுத் திறனாளிகள் சங்க கூட்டமைப்பு**

புதிய எண். 164, சின்ன ஈக்காடு முதல் தெரு, ரெட்ஹில்ஸ் ரோடு,
ஈக்காடு – 602 021. திருவள்ளூர் மாவட்டம், செல் : 9944003395

# இக்கையேட்டின் அவசியம் பற்றி...



அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே !

ஐ.ஆர்.சி.டிஎஸ். சமூக மேம்பாட்டு நிறுவனம் கடந்த 25 ஆண்டு காலமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் மத்தியில் மத்திய – மாநில அரசுகள், சர்வதேச அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பஞ்சாயத்து அமைப்புகளுடன் இணைந்து சமூக மேம்பாட்டு பணிகளை பணி இலக்கு மக்களின் முழுமையான பங்கேற்புடன் செயல்படுத்தி வருகின்றது.

மாற்றுத் திறனாளிகள் மத்தியில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பணி செய்ததன் விளைவாகவும், கடம்பத்தூர் மற்றும் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 164 கிராமங்களில் (47 பஞ்சாயத்துகளில்) வசிக்கும் 1634 மாற்றுத் திறனாளிகளுடனும் / அவர்களது குடும்பங்களுடனும் நேரடியாக இணைந்து பணி செய்வதன் வெளிப்பாடாக 130 மாற்றுத் திறனாளிகள் சுய உதவி குழுக்களும் (சங்கமும்) 6 பகுதி அளவிலான கூட்டமைப்பும், வசந்தம் மாற்றுத் திறனாளிகளின் மாவட்ட கூட்டமைப்பும் உருவாகியுள்ளன.

இக்கூட்டமைப்பினை, திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு மாற்றுத் திறனாளிகள் மற்றும் அமைப்புகள் தொடர்பு கொண்டு அனுபவங்களை பயிற்சிகள் மூலமாகவும், நேரடி களப்பார்வை மூலமாகவும் தெரிந்து கொள்கின்றனர். உறுப்பினர்களாகவும் சேர்ந்துக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் தமிழகத்தின் வட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், வேலூர் மாவட்டங்களிலிருந்தும் மாற்றுத் திறனாளிகள் இக்கூட்டமைப்பை தொடர்பு கொண்டு அனுபவ அறிவை பயன்படுத்தி கொள்கின்றனர்.

இக்கூட்டமைப்பு ஆலமரமாக வளர்ந்து மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாத்திட சமமான வாய்ப்பினையும், கௌரவத்தினையும் பெற்றிட இக்கையேட்டினை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றேன்.

மாற்றுத் திறனாளிகள் குழுவாக ஒருங்கிணைவதற்கும், வசந்தம் கூட்டமைப்பில் உள்ள உறுப்பினர்களும், நிர்வாகிகளும் தங்களது பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்து செயல்படுவதற்கும் இந்த கையேடு உதவியாய் இருக்கும் என்ற நோக்கத்திலும், எங்களை போன்று மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காவும், உரிமைக்காகவும் குரல் கொடுக்கும் சமூக மேம்பாட்டு நிறுவனங்களுக்கும் இது வழிகாட்டியாய் இருக்கும் என்று திடமாக நம்புகிறேன்.

இக்கையேடு தயாரிப்பதற்கு அனுபவங்களை பகிர்வு செய்த வசந்தம் கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் ஐஆர்சிடிஎஸ் பணியாளர்களுக்கும் நன்றி !

எங்களது பணியாளர்களின் திறனை வளர்ப்பதற்கு உதவியாக இருந்த ஏ.டி.டி. இந்தியா மற்றும் வித்யா சாகர் நிறுவனங்களுக்கும் மனமார்ந்த நன்றி !

இக்கையேட்டினை வெளியிடுவதற்கு துணை புரிந்த Duetscher Caritasverband and CBR Forum நிறுவனங்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி. டைட்டஸ்
இயக்குனர்

24-09-2011

ஐ.ஆர்.சி.டி.எஸ் சமூக மேம்பாட்டு நிறுவனம்

மாற்றுத் திறனாளிகளின் இதயத்திலிருந்து....



என் அன்பிற்கினிய நண்பர்களே !

வசந்தம் மாற்றுத்திறனாளிகள் சங்க கூட்டமைப்பின் சார்பில் வாழ்த்துக்கள் !

திருவள்ளூர் மாவட்டத்தில் கடம்பத்தூர், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து துவங்கப்பட்ட வசந்தம் கூட்டமைப்பானது ஆலமரம் போல் மாவட்டத்தின் மற்றும் மாநிலத்தின் இதர பகுதிகளிலும் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக விரிவடைந்து வருவது நமது கூட்டமைப்பிற்கு கிடைத்த அங்கீகாரமாகும் நமது உழைப்பிற்கு கிடைத்த வெற்றியாகும்.

மாற்றுத் திறனாளி பிரச்சினைகளின் ஆணி வேரை கண்டறிந்து அதனை அகற்றுவதற்கான உரிமையை நோக்கிய பயணத்தில் ஈடுபட்டுள்ள நமது கூட்டமைப்பு செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது, இருப்பினும் நமது சங்க கூட்டமைப்பின் ஆரம்பமானது சிறப்பானதாகும்.

சரியான இலக்கை நோக்கி சரியான பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதனை பல நல்ல உள்ளங்கள் சார்பில் கூறுவதை கேட்கும்போது நமக்குள் புது உத்வேகம் பிறக்கிறது.

நமது கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு உரமாக இருந்து வருகின்ற CBR FORUM நிறுவனத்தை சார்ந்த இயக்குனர் திரு. நிக்கோலஸ் குயா ரிபெல்லோ, திரு. C மகேஷ், திரு. டோமினிக் ஆகிய அலுவலர்களுக்கும் எங்களது இனிய நன்றியினை காணிக்கையாக்குகின்றேன்.

எங்களுக்கு போதிய ஊக்கத்தை அளித்து வரும் அரசு அதிகாரிகள், வங்கியாளர்கள், பஞ்சாயத்து பிரதிநிதிகள் அனைவருக்கும் எங்களது அன்பான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று எங்களது கூட்டமைப்பின் வளர்ச்சிக்காக எங்களுடன் சேர்ந்து உழைக்கின்ற ஐ.ஆர்.சி.டி.எஸ் இயக்குனர் திரு. பி. டைட்டஸ் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

எங்களது முழுமையான வளர்ச்சிக்கும், சங்க கூட்டமைப்பின் முன்னேற்றத்திற்கும், பக்க பலமாக இருக்கின்ற எங்களது உறுப்பினர்களின் பெற்றோர்களுக்கும், குடும்ப அங்கத்தினர்களுக்கும் இந்த கையேட்டினை அர்ப்பணிக்கின்றேன்.

அனைத்து சங்க உறுப்பினர்களும், புதிய உறுப்பினர்களும், குடும்பத்தினரும் படித்து, புரிந்து செயல்படுமாறு வேண்டுகிறேன் ! வாழ்த்துகிறேன் !.

மக்கள் முன்னேற்ற பணியில்
என்றும் அன்புடன்
**A. லிவிங்ஸ்டன்**
தலைவர்
வசந்தம் மாற்றுத்திறனாளிகள் சங்க கூட்டமைப்பு

“ஒன்றாய் வருவது துவக்கம்
ஒன்றாய் இருப்பது முன்னேற்றம்
ஒன்றாய் பணி செய்வது வெற்றி”

**தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்**

## 1. மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக்குழு (சங்கம்)

ஒரே பகுதியை சேர்ந்த ஒருமித்த கருத்துடைய 18 முதல் 60 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளிகள் 5 முதல் 20 வரை என்ற எண்ணிக்கையில் ஒன்றிணைந்து தங்களது முன்னேற்றத்திற்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் ஒரே குழுவாக சேர்ந்து செயல்படுதலே சுய உதவிக்குழு எனப்படும்.

**குறிப்பு :**

❖ மனவளர்ச்சி குன்றியோராக இருந்தால் அவரது பாதுகாவலரை குழுவில் உறுப்பினராக சேர்த்து கொள்ளலாம் என்று தமிழக அரசின் சுற்றறிக்கை கூறுகிறது.

❖ 18 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறுவர்கள் சார்பில் அவர்களது பெற்றோர்களை குழுவில் உறுப்பினராக சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து வசந்தம் கூட்டமைப்பு சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

❖ சேமிப்பதன் அவசியம்

- அவசரத் தேவைக்கு பயன்படுத்திடவும்
- வங்கிகடன் பெற்றிடவும்
- கந்து வட்டிக்கடன் கொடுமையிலிருந்து முழுமையாக விடுபட்டிடவும்
- தன்னம்பிக்கை அதிகரித்திடவும்
- சிறு தொழில் தொடங்கி வருமானத்தை பெருக்கிடவும் சேமிப்பு அவசியமாகிறது.

❖ மாற்றுத்திறனாளிகள் சுய உதவிக்குழுவானது *சேமிப்பு மற்றும் கடனை மையமாக வைத்து ஆரம்பிக்காமல் உரிமையை பாதுகாத்திட ஒற்றுமையாய் குரல் கொடுப்பதற்குரிய ஒரு அமைப்பாக செயல்படுவதை மையமாக வைத்து ஆரம்பித்தல் அதிக நன்மை பயக்கும் என்றும் நீடித்த நிலைத்த* தன்மையுள்ளதாக இருக்கும் என்பதில் வசந்தம் கூட்டமைப்பு ஆழ்ந்த நம்பிக்கை வைத்துள்ளது.

- சேமிக்க இயலாதவர்களையும் குழு உறுப்பினராக சேர்த்து கொள்ளலாம்.

- கடன் பெறுவதற்காக மட்டும் சுய உதவிக்குழுவில் சேர வேண்டும் என்ற எண்ணம் தவறானது.

- சேமிப்பதற்கும், கடன் பெறுவதற்கும் ஏதுவாக, பெண் மாற்றுத் திறனாளிகள், மாற்றுத் திறனாளிகளின் மனைவிகள், மாற்றுத்திறனாளிகளின் தாய் அல்லது பராமரிப்பாளர்கள் மகளிர் சுய உதவிக்குழுவில் சேருவதை வசந்தம் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

- மாற்றுத்திறனாளிகள் சுய உதவிக்குழுவில் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளையும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும். நிர்வாக பொறுப்புகள் அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

- குழுவின் நிர்வாக பொறுப்புகளில் பெண் மாற்றுத்திறனாளிகளுக்கு குறைந்த பட்சம் 33 சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் அவசியம் என்ற கருத்தை வசந்தம் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

## 2. திறன் வளர்ப்புப் பயிற்சி

மாற்றுத்திறனாளிகளிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்ந்து சமுதாயத்தில் மதிப்புமிக்கவர்களாக உயர்த்திட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## 3. சுய உதவிக்குழு (சங்கம்)

**a) உறுப்பினர் தகுதி :**

இக்குழுவானது ஆண்டிற்கு சந்தாவாக உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 25/– வீதம் மாவட்ட கூட்டமைப்பிற்கு செலுத்தும். இவர்கள் கூட்டமைப்பின் சாதாரண உறுப்பினர் (Regular Member) ஆவார்கள்.

b) திருவள்ளூர் மாவட்டத்தின் இதர பகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளின் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25/– வீதம் சந்தா செலுத்தி உறுப்பினராகலாம்.

**இணை உறுப்பினர் :**

c) மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இல்லாத பட்சத்தில் நேரடியாக மாவட்ட கூட்டமைப்பில் ஆண்டொன்றுக்கு சந்தாவாக ரூ. 150/– செலுத்தி இணை உறுப்பினர் (Associate Member) ஆகலாம்.

d) திருவள்ளூர் மாவட்டத்தை தவிர இதர மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் அமைப்புகளும் வசந்தம் கூட்டமைப்பில் ஆண்டொன்றுக்கு ரூ. 300/– செலுத்தி இணைப்பு தகுதி (affiliated Status) உறுப்பினராகலாம்.

**e) குழு உறுப்பினரின் கடமைகள் :**

- ❖ குழு செயல்பாடுகளில் ஆர்வமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- ❖ குழு மேம்பாட்டிற்கு நேரத்தைசெலவிடக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ❖ குழு கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

- ❖ பொறுப்பை உணர்ந்து தன்னார்வத்துடன் செயல்பட வேண்டும்.
- ❖ பயிற்சிகளில் கலந்து கொள்ள வேண்டும்.
- ❖ குழு நிர்வாகிகளுக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும்.
- ❖ குழுவினர் வரவு, செலவு கணக்குகளைப் பற்றி தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- ❖ குழு எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
- ❖ குழுவின் நோக்கம் நிறைவேறுவதற்கு உழைக்க வேண்டும்.

## f) சுய உதவிக்குழு நிர்வாகிகளை (ஊக்குனர், பிரதிநிதி-1, பிரதிநிதி-2) தெரிவு செய்யப்படுதற்கான வரைமுறைகள் :

- ❖ பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும்.
- ❖ மாற்றுத் திறனாளிக்கான அரசு அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும்.
- ❖ மாற்றுத் திறனாளியாக இருக்க வேண்டும். (பராமரிப்பாளர்கள் நிர்வாகியாக இருக்க கூடாது)
- ❖ நல்ல மனநிலை உள்ளவராக (Sound Minded) இருக்க வேண்டும்.
- ❖ பேச்சு / எழுத்து திறமை உள்ளவராக இருக்க வேண்டும்.
- ❖ குழுவை வழிநடத்தக்கூடிய தலைமைத்துவப்பண்பு உடையவராக இருக்க வேண்டும்.
- ❖ பொறுமை, சகிப்புத்தன்மை உடையவராக இருக்க வேண்டும்.
- ❖ வெளியுலகத் தொடர்பு உடையவராக இருக்க வேண்டும்.
- ❖ குடும்ப நபர்களின் ஒத்துழைப்பு உடையவராக இருக்க வேண்டும்.
- ❖ உறுப்பினர்களின் கருத்துக்களை மதிப்பவராக இருக்க வேண்டும்.
- ❖ கூட்டமைப்பு கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

## g) சுய உதவிக்குழுவின் பணிகள் :

- ❖ மாதம் / இருவாரம் / வாரம் ஒரு முறை குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- ❖ முறையாக பதிவேடுகளை பராமரிப்பது.
- ❖ வெளிப்படையான நிர்வாகம் செய்வது.
- ❖ தனிநபர் தேவைகளை கண்டறிந்து தீர்ப்பதற்கு வழிவகை செய்தல். தீர்வுக்குரிய முறையை பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மாவட்ட கூட்டமைப்புகளை அணுகி (CLF & DLF) ஆலோசனை பெறுதல்.
- ❖ குழுவில் ஒரு நபருக்கு அநீதி ஏற்பட்டால் / பிரச்சனை நிகழ்ந்தால் அனைவரும் ஒருமித்த குரல் கொடுப்பது.
- ❖ வங்கி, அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் வருவாய் ஈட்டும் திட்டங்களில் ஈடுபடுதல்.
- ❖ திறமையின் அடிப்படையில் தொழிற்பயிற்சிப் பெற்று பொருளாதாரத்தை மேம்படுத்துவது.

## h) சுய உதவிக்குழு நிர்வாகிகளின் பொறுப்புகளும், கடமைகளும் :

- ❖ குழு கூட்டங்களை தவறாமல் நடத்த வேண்டும்.
- ❖ குழு கூட்டங்களில் உறுப்பினர்கள் கலந்து கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ உறுப்பினர்களுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.
- ❖ குழுவில் பேசப்படும் கருத்துக்கள் மற்றும் குழு மூலமாக எடுக்கப்படும் முடிவுகளை செயல்படுத்த வேண்டும்.
- ❖ பயிற்சிக்கு சென்று அதன் விபரங்களை கருத்துக்களை கூட்டத்தின் உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- ❖ அரசு திட்டங்களை பெறுவதற்கு வங்கிக்கு / அரசு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டும்.
- ❖ குழுவின் வரவு செலவு கணக்குகளை கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு வாசித்துக்காட்ட வேண்டும்.

## 4. சங்க கூட்டமைப்பு - விளக்கம்

மாற்றுத் திறனாளிகள் தங்களுக்குள் ஒன்றாக இணைந்து, சங்கமாக ஒருங்கிணைந்து வழி நடத்தவும், மாற்றுத் திறனாளிகள் தங்களது மனித உரிமைகளை (குடியுரிமை, அரசியல், சமூக, பொருளாதார கலாச்சார உரிமைகளை) பாதுகாத்துக் கொள்ளவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே "சங்க கூட்டமைப்பு" ஆகும்.

## 5. சங்க கூட்டமைப்பின் அவசியம் :


- ❖ தன்னம்பிக்கை வளர்த்திட.
- ❖ சுய உதவிக்குழுக்களை (சங்கங்களை) ஒருங்கிணைத்து வழி நடத்திட.
- ❖ குழுக்களின் நிர்வாகத்தைச் சீரமைத்திட.
- ❖ குழுக்களின் நிதி மேலாண்மையை மேம்படுத்திட.
- ❖ குழு உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாத்திட.
- ❖ ஒற்றுமையாய் குரல் கொடுத்திட
- ❖ குடும்பம் முன்னேற்றம் அடைந்திட
- ❖ குழுக்களின் சமூக மேம்பாட்டிற்கு துணை புரிந்திட.
- ❖ கிராம அளவில் மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்கான அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்திட.
- ❖ உள்ளூர் வளங்களை கண்டறிந்து அவற்றை குழு உறுப்பினர்கள் பயன்படுத்தி வாழ்க்கையில் வளம் பெற்றிட.
- ❖ மாற்றுத் திறனாளிகளுக்கும் மற்றவர்களுக்குமிடையேயான உள்ள பாரபட்சத்தினை அகற்றிட.
- ❖ குழு உறுப்பினர்களின் திறன் மற்றும் திறமைகளை வளர்த்திட.
- ❖ மாற்றுத் திறனாளிகள் அரசுத் திட்டங்களை பெற்றிட.
- ❖ சமுதாயத்தில் மாற்றுத் திறனாளிகளின் தேவைகள் மற்றும் உரிமைகளை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட.

❖ சமுதாய முன்னேற்றத்திற்கு மாற்றுத்திறனாளிகள் தங்களது பங்களிப்பை அளித்திட.

**கூட்டமைப்பு என்றால்**

❖ ஒற்றுமை
❖ சக்தி
❖ அங்கீகாரம்
❖ பாதுகாப்பு
❖ தன்னம்பிக்கை

## 6. மாவட்ட கூட்டமைப்பின் நிர்வாக அமைப்பு முறை




### a) பொதுக்குழு :

❖ மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக்குழுவின் ஊக்குனர், (தலைவர்) குழுவின் சார்பில் பொதுக்குழு உறுப்பினராக செயல்படுவார்.

❖ பொதுக்குழு கூட்டம் ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறும்.

### b) நிர்வாகக் குழு :

❖ ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் உள்ள பொதுக்குழு உறுப்பினர் மத்தியிலிருந்து ஒரு பிரதிநிதி நிர்வாகக் குழுவிற்கு தெரிவு செய்யப்படுவார்.

❖ நிர்வாகக் குழு கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவையின் அடிப்படையில் நடைபெறும்.

## c) வழிநடத்தும் குழு :

❖ நிர்வாகக் குழுவில் உள்ள சில திறமை வாய்ந்த, சங்க பணிகளுக்கு போதிய நேரத்தை ஒதுக்கக் கூடிய, பயிற்சி அளிக்கும் திறமையுடைய, மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய குழுவே வழி நடத்தும் குழுவாகும். இக்குழுவில் அதிகபட்சமாக 20 நபர் இருப்பார்கள்.

❖ இக்குழு கூட்டம் மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவையின் அடிப்படையில் நடைபெறும்.

## d) ஆலோசனைக் குழு :

❖ அனுபவம் வாய்ந்த சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் ஆலோசனை குழுவில் இடம் பெறுவார்கள்.

❖ இக்குழு கூட்டம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது தேவையின் அடிப்படையில் நடைபெறும். கூட்டத்திற்கு வர இயலாதவர்கள் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப தொழில்நுட்ப / மருத்துவ ஆலோசனைகளை அளிப்பார்கள்.

❖ குழு பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும்.

❖ அரசு திட்டங்களை பெறுவதற்கு குழு உறுப்பினர்களுக்கு தூண்டுகோலாகவும், வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டும்.

❖ பஞ்சாயத்து அளவில் உள்ள பங்குதாரர்களுடன் நல்லுறவு உடையவராக இருக்க வேண்டும்.

❖ தனிநபர் தேவையை அறிந்து அதனை பூர்த்தி செய்ய உதவியாக இருக்க வேண்டும்.

❖ ஒரு தாய் குழந்தையை வளர்த்து பராமரிப்பது போல குழுவை வழிநடத்தவும், பராமரிக்கவும் வேண்டும்.

- வெளிப்படையான நிர்வாகம் இருக்க வேண்டும்.
- கூட்டமைப்பு நிர்வாகிகளுடன் நல்ல தகவல் பரிமாற்றம் வைத்திருக்க வேண்டும்.

## 7. பகுதி அளவிலான கூட்டமைப்பு (CLF)

### a) CLF பொறுப்பாளர்களை தெரிவு செய்வதற்கான வரைமுறைகள் :

- பதவிக்காலம் – 3 வருடங்கள் ஆகும்.
- அடிப்படையில் குழுவின் ஊக்குனராக இருக்க வேண்டும்.
- மாற்றுத்திறனாளிக்கான அரசு அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும்.
- படிப்பு / அனுபவம் / வெளியுலகத் தொடர்பு உடையவராக இருக்க வேண்டும்.
- ஒரு பஞ்சாயத்தில் அதிக மாற்றுத் திறனாளிகள் இருக்கின்ற குக்கிராமத்திலுள்ள நபராக இருத்தல் நல்லது.
- பேச்சு / எழுத்து திறமையுள்ளவராக இருக்க வேண்டும்.
- சமுதாயப் பணியில் ஆர்வமிக்கவராகவும் அர்ப்பணிப்புள்ளவராகவும் இருக்க வேண்டும்.
- மாற்றுதிறனாளிகளின் உரிமைக்காக குரல் கொடுப்பவராக / வாதாடுபவராக / நேரத்தை செலவிடுபவராக இருக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகளின் தேவை மற்றும் உரிமைகளை குறித்து தெரிந்திருப்பவராக இருக்க வேண்டும்.

### b) CLF நிர்வாகிகளின் கடமைகளும், பொறுப்புகளும் என்ன ?

- மாதம் ஒரு முறை CLF கூட்டம் நடத்துவார்கள், பகுதியில்

ஏதேனும் மாற்றுத் திறனாளிகளுக்கு அநீதி இழைத்துவிட்டால் அங்கு ஆஜராகி குரல் கொடுப்பவராக இருக்க வேண்டும்.

- மாதம் ஒரு முறை CLF கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.
- பயிற்சியில் கலந்து கொள்வார்கள் (அரசு, தனியார்)
- DLF ற்கும் சுய உதவிக்குழுக்களுக்கும் பாலமாகத் திகழுவார்கள்.
- சுய தொழில் செய்வதற்கு ஊக்குவிப்பார்கள்.
- அரசு / தனியாரிடம் திட்டங்களை பெறுவதற்கு வழிவகை செய்வார்கள்.
- CLF நிர்வாகி, மாவட்ட கூட்டமைப்பில் நிர்வாக குழு உறுப்பினராக செயல்படுவார்.

## 8. மாவட்ட அளவிலான கூட்டமைப்பு (DLF)

### a) DLF நிர்வாகிகளை தேர்வு செய்யும் முறை :

- பதவிக் காலம் 3 வருடங்கள் ஆகும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும்.
- பேச்சுத் திறமை உடையவர்களாக இருக்க வேண்டும்
- DLFன் நிர்வாகிகள் பகுதி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதாவது நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஓட்டு மூலம் நிர்வாகிகளை தேர்வு செய்வார்கள்.
- தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு தேர்தலில் போட்டியிடும் நபர் மனுதாக்கல் செய்ய வேண்டும்.
- மனுதாக்கல் செய்தபின் அவர்களுக்கான சின்னம் ஒதுக்கப்படும்.
- அதன்பின் தேர்தல் பிரச்சாரம் செய்வார்கள்.

- ஜனநாயக தேர்தல் முறைப்படி பொறுப்பாளர்களை தேர்வு செய்யப்படுவார்கள்.
- ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி வாக்குச்சீட்டு எண்ணப்பட்டு அதிக வாக்கு பெற்றவர்கள் தலைவராகவும், அதற்கு குறைவான வாக்குப் பெற்றவர்கள் செயலாளராகவும் அடுத்தவர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- மாற்றுத் திறனாளிகளின் தேவைகளையும், உரிமைகளையும் குறித்த அறிவும், தெளிவும் உடையவராக இருக்க வேண்டும்.
- அர்ப்பணிப்பு தன்மை உடையவராக இருக்க வேண்டும்.
- தொலைநோக்கு பார்வையுடைவராக இருக்க வேண்டும்.

## b) DLF நிர்வாகிகளின் கடமைகளும், பொறுப்புகளும் :

- கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.
- பயிற்சிகளில் கலந்து கொள்ளுதல் (வெளி மாநிலங்கள் உட்பட)
- அரசு நலத்திட்டங்கள் பெற வழிகாட்டுதல்.
- மற்ற கூட்டமைப்புகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல்.
- வேலை வாய்ப்பு பெற்றுத் தர வழிகாட்டுதல்.
- உள்ளூர் / வெளியூர் வள ஆதாரங்களை திரட்டும் திறமையுள்ளவராக இருக்க வேண்டும்.
- பிரச்சனையைக் கண்டறிந்து அதற்கான தீர்வுக்கான வழிகாட்டுதல்.

## c) மாவட்ட அளவிலான கூட்டமைப்பின் பணிகள் :

- மூன்று மாதத்திற்கு ஒரு முறை செயற்குழு கூட்டம் நடத்துதல்.
- வங்கியில் பொறுப்பாளர்கள் பெயரில் கணக்கு துவங்குதல்.


- ❖ தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவலை அறிந்து வழக்காடுதலுக்கு பயன்படுத்த வேண்டும்.
- ❖ ஆறு மாதத்திற்கொருமுறை வழக்காடுதல் கூட்டம் நடத்த வேண்டும்.
- ❖ அரசுத் திட்டங்களை பெற்றுத் தருதல்.
- ❖ மற்ற நிறுவனங்களிடமிருந்து நிதி ஆதாரங்களை பெற்றுத் தருதல்.
- ❖ மற்ற நிறுவனங்களிடமிருந்து உதவிப் பெற்று தொழிற்பயிற்சி அளித்தல் (அரசு / தனியார்)
- ❖ ஒத்த கருத்துடைய தனியார் நிறுவனங்களுடனும் / அமைப்புகளுடனும் இணைந்து பகுதி / மாவட்ட / மாநிலம் சார்ந்த பிரச்சனைகளுக்கு போராடுதல்.
- ❖ மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்காக போராடுதல்.

## 9. மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்கு


அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளும் சுயஉதவிக் குழுக்களாகவும் (சங்கமாக) கூட்டமைப்பாகவும் ஒருங்கிணைதலும், சங்கத்தை வலுப்படுத்துதலும் கூட்டுபேரம் செய்தலும் உரிமைகளை பாதுகாப்பதற்கு கூட்டு செயல்பாடுகளில் ஈடுபடுதலும் மிகவும் அவசியமானதாகவும்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை !
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு !
ஒன்றுபடுவோம் ! வெற்றி பெறுவோம் !

## வசந்தம் கூட்டமைப்பின் அமைப்பு




() மாற்றுத்திறனாளிகளின் சுய உதவிக்குழு



வசந்தம் கூட்டமைப்பின் தொலைநோக்கு பார்வை
தேசிய அளவிலான
Govt. Departments/DPOs/NGOs
Human Rights Networking organisations
மத்திய அரசு துறைகள்/முகமைகள்
CBR FORUM
ADDI, BASIC NEEDS, SWADHIKAR, NCPEDP, SENSE Intl.
வசந்தம் மாற்றுத்திறனாளிகள் மாவட்ட கூட்டமைப்பு
மாநில மற்றும் மாவட்ட அளவிலான
Govt. Departments/DPOs/NGOs/Human Rights
மாவட்ட நிர்வாகம்
மாநில அரசு துறைகள்/முகமைகள்
தமிழ்நாடு ஊனமுற்றோர் கூட்டமைப்பின் அறக்கட்டளை
தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்வு சங்கம்
ADDI, VIDYASAGAR
TNVHA, Holy Cross Services Society
ஒன்றியம் 1 கடம்பத்தூர்
ஒன்றியம் 2 திருவள்ளூர்
ஒன்றியம் 3 பூண்டி
ஒன்றியம் 4
ஒன்றியம் 5
ஒன்றியம் 13
ஒன்றியம் 14

## வழக்காடுதல் (Advocacy) பணியில் ஈடுபட்டுள்ளோர்களின் சுய ஆய்விற்கான 10 கேள்விகள்

*– அனுபவ பகிர்வு : ஐஆர்சிடிஎஸ் CBR திட்ட பணியாளர் குழு*

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக வழக்காடுதல் (Advocacy) பணியினை சிறப்பாக செய்வதற்கு கூட்டமைப்பு தலைவர்கள் (Federation Leaders), CBR பணியாளர்கள் (CBR Workers) ஒருங்கிணைப்பாளர்கள் (Coordinators) திறமையுடன் செயல்படுகின்றோமா ? நமக்கு நாமே கேட்க வேண்டிய 10 கேள்விகள் :

1. மாற்றுத் திறனாளிகள் சம்மந்தப்பட்ட சட்டத்தின் சாராம்சங்கள், அரசின் நல திட்டங்கள் ஆகியவைப்பற்றி தெளிவாக தெரிந்து வைத்திருக்கின்றோமா ?
2. மாற்றுத்திறனாளிகள் சம்மந்தமான அரசின் கொள்கை குறிப்புகள் (Policy Note), சம்மந்தப்பட்ட அரசாணைகள் (Government Order), செய்திதாள் அறிக்கைகள் (Press Clippings) நம் கைவசம் இருக்கின்றதா ?
3. அரசின் நிர்வாக அமைப்பு (Administrative Structure) குறித்தும், அரசுத்துறைகள் குறித்தும், அதிகாரிகளின் அதிகார வரம்புகள் குறித்தும், எந்த பிரச்சினைக்கு யாரை அணுக வேண்டும் என்பது பற்றி தெளிவாக தெரிந்து வைத்திருக்கின்றோமா ?
4. மாற்றுத்திறனாளிகளின் தேவைகள், பிரச்சினைகள் (Problems / Issues) குறித்தும், பாதிப்புகள் குறித்தும் முழுமையான தகவல்கள், புள்ளி விவரங்கள், புகைப்பட ஆதாரங்கள், பத்திரிகை செய்திகள், ஏற்கனவே இந்த பிரச்னை சம்மந்தமாக எடுத்த முயற்சிகளுக்கான ஆதாரங்கள், கிடைக்கப்பெற்ற பதில்கள் (உதாரணமாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற பதில்கள், அரசு அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட கடிதங்கள் உட்பட) நம்மிடம் இருக்கின்றதா ?
5. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பல தரப்பினரும் முன் வைக்கும் ஆலோசனைகளை (மாற்றுத்திறனாளிகள், சமூக ஆர்வலர்கள், சமுதாய பிரதிநிதிகள், பஞ்சாயத்து தலைவர்கள், அரசு அலுவலர்கள்) ஆவணப்படுத்தி சட்டத்துடனும் / அரசாணைகளுடன் ஒப்பிட்டு

பார்த்து தீர்வு காண்பதற்கான கோரிக்கை மனுவின் / Concept Note –இன் தயாரிப்பு வைத்துள்ளோமா ?

6. அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்தும், நமது கோரிக்கை குறித்தும் மாற்றுத்திறனாளிகள் (சங்க உறுப்பினர்கள்) மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறோமா?

7. சங்க / கூட்டமைப்பு தலைவர்கள் தங்களது பிரச்சினைகளை குறித்தும், கோரிக்கை குறித்தும் திறமையாக, தைரியமாக, தெளிவாக பேசக்கூடிய அளவிற்கு தயாராகியிருக்கிறார்களா ?

8. சங்க கூட்டமைப்பிற்கு உறுப்பினர்கள் எண்ணிக்கை ஒரு அடிப்படையான பலமாகும். கோரிக்கைகளை முன்வைப்பதற்கும், பின் தொடர்வதற்கும், சூழ்நிலைக்கு பொருத்தமான யுத்திகளை வகுத்து செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையாக கூட்டமைப்பு வலுவாக உள்ளதா ?

9. முன்வைக்கப்படும் கோரிகைகளை மனு, துண்டு பிரசுரங்கள், போஸ்டர்கள் மூலம் வெளியிட்டு பொதுவில் சமுதாய குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், பத்திரிகைகள், கூட்டமைப்புகள் ஆதரவினை திரட்டுகிறோமா ? இந்த ஆதரவுகளை நமது கோரிக்கைகள் வலுப்படுத்துவதற்கும், அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கும் ஆக்கப்பூர்வமான விதத்தில் பயன்படுத்துகின்றோமா ?

10. சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகளை பின் தொடர்கின்றோமா ? ஆவணப்படுத்துகிறோமா ? அவ்வப்போது சங்க கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், தொடர்புள்ள அமைப்புகளுக்கும் தெரியப்படுத்துகிறோமா, அடுத்த கட்ட நடவடிக்கைகள் (நேரடி பேச்சு வார்த்தை, கருத்தரங்கம், பொது கூட்டங்கள், ஊர்வலம், மனித சங்கிலி, உண்ணாவிரதம் உள்பட) குறித்து திட்டமிடுகிறோமா ? திட்டமிடுதல் செயல்படுத்துகிறோமா ? செயல்பாடுகளை சுய ஆய்வு / சுய மதிப்பீடு செய்கின்றோமா ? நமது அனுபவங்களை நம்மை போன்ற அமைப்புகளுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் பகிர்வு (Knowledge Sharing) செய்கிறோமா ?



கூட்டமைப்பு தேர்தல் வெற்றி




உலக ஊனமுற்றோர் தின விழா



உலக ஊனமுள்ளோர் தின விழா – ஊர்வலம்



மாவட்ட கலெக்டர் Dr. இராஜேந்திரகுமார், IAS
தலைமையில் அரசு அதிகாரிகளுக்கு ஐ.ஆர்.சி.டி.எஸ்
நிறுவனம் பயிற்சி அளித்தது.



CBR Forum நிர்வாக இயக்குனர் திரு. நிக்கோலஸ்
அவர்களுடன் கலந்துரையாடல்



மாற்றுத் திறனாளிகள் உரிமைகளுக்கான வழக்காடுதல் கூட்டத்தில்
ஐ.ஆர்.சி.டி.எஸ் இயக்குநர் பி. டைட்டஸ்,
திரு. C. மகேஷ் மற்றும் திரு. டோம்னிக் திட்ட அலுவலர்கள்,
CBR Forum



மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி



மாவட்ட முன்னோடி வங்கி அலுவலர்
திரு. சுரேஷ்குமார், இந்தியன் வங்கி, திருவள்ளூர்